DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**STC.No.548/2025**

Prosecution **PW.1**

Court

பு.சா. 1 தினேஷ் த/பெ செல்வராஜ்
தேதி: 11.05.2026.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. எதிரியின் கணவர் முத்துராஜாவும் நானும் நண்பர்களா என்றால் எனது போட்டோ ஸ்டியோ வருவார் நண்பர் என்ற முறையில் தெரியும். நான் நட்பு அடிப்படையில் அவரது வீட்டிற்கு சென்றேனா என்றால் அவர் வீட்டிற்கு சென்றதில்லை திருக்காம்புலியூர் பேருந்தது நிறுத்தத்தில் பார்த்துள்ளேன். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பழக்கத்தின் அடிப்படையில் அவர் வீட்டிற்கு சென்று வருவேன் என்றாலும் சரியல்ல. எதிரியும் அவரது கணவரும் சேர்ந்து கிருஷ்ணராயபுரம் ஈக்விடாஸ் வங்கியில் கடன் வாங்கியிருந்த விவரம் எ னக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. அந்த கடனுக்காக திவ்யா 10 செக் கையொப்பம் கேட்டு அதற்காக தவறுதலாக எதிரி திவ்யா 11 காசோலைகளில் கையொப்பம் செய்திருந்தார் என்றால் எனக்குத் தெரியாது. 10 காசோலை தவிர கையொப்பம் மட்டும் செய்த பூர்த்தி செய்யாத ஒரு காசோலை எதிரி வீட்டில் வைத்திருந்தார் என்றாலும் நான் அவர் வீட்டிற்கு சென்று வரும்போது காசோலை எடுத்து இந்த வழக்கு போட்டுள்ளது இந்த வழக்கு போட்ட பிறகு எதிரிக்கு தெரியவந்தது என்றால் நான் காசோலையை எடுக்கவில்லை. அதனால் தான் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் ஒரு மையினாலும், எழுத்துக்கள் ஒரு மையினாலும் உள்ளது என்றால் இல்லை.

3. 30.07.2025 ம் தேதி திவ்யாவை நேரில் பார்க்கவில்லை என்று கூறியுள்ள நிலையில் என்னுடைய பிராமாண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் 30.07.2025 ம் தேதி மணிகண்டன் முன்னிலையில் மூன்று லட்சம் பணம் கடனாக பெற்றார் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பது சட்டப்படி தண்டிக்கக்கூடிய குற்றம் என்றால் சரியல்ல எதிரி போனில் வருவதாக சொன்னார் பிறகு வரமுடியவில்லை என்ற கூறி பூர்த்தி செய்யப்பட்ட காசோலை கொடுப்பதாக கூறி அவரது கணவரிடம் காசோலையை கொடுத்து பணம்

பெற்றார். எதிரி வரவில்லை போனில் பேசியதாகவும், அவரது கணவரிடம் பணம் கொடுக்கச்சொல்லி அவரது கணவரிடம் பணம் கொடுத்தாக என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு புகார், பிராமாண வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லியுள்ளேனா எ ன்றால் அவ்வாறு சொல்லவில்லை.

4. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் திவ்யாவிடம் நான் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் அவரது கணவரிடம் கொடுத்தேன். திவ்யா வேலையில் இருந்ததை பின்னால் தெரிந்துகொண்டு அவரது கணவர் காசோலை கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல அவரது கணவரிடம் பணம் கொடுத்தேன். எதிரியின் கணவரிடமும் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி போன் மூலமாக அவரது கணவருக்கு பணம்கொடுக்கச் சொல்லவில்லை என்றால் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படி வழக்குச் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.12 17:23:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.